பக்கங்கள்: ஆறு கார்த்திகை 1992 Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை (01-11-1992) UTHAYAN - A Lively National Tamil Daily இதழ் 339

# மணலாறில் படை நிலைகளை பலப்படுத்த ராணுவம் முயற்சி

## மட்டக்களப்பு வாவியில் தமிழ் மீனவர் சுட்டு கொலை

யாழ்ப்பாணம், நவ. 1

மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் ஏரியில் அதி காலை வேளை மீன் பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர் ஒருவர் பொலீஸாரால் சுட்டுக்கொல் லப்பட்டார்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

அதிகாலை 3 மணியளவில் ...தாய மீனவரின் சடலம் ...புடன் கரை ஒதுங்கிக் ...க் காணப்பட்டதாகத் ...க்கப்பட்டது.

...க்களப்பு நாவற்குடா ...சேர்ந்த மகாதேவன் ...திரராஜா என்ற மீன வரே பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பு ஏரியிலோ கடலிலோ மீன் பிடிக்க தமிழ் மீனவருக்கு படையினர் தடை விதித்துள்ளனர். இந்தத் தடை உத்தரவை மீறி — தம் பட்டினி நிலையை நீக்க — மீன் பிடிக்கச் சென்றவர்கள் பலர் இவ்வாறு சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் படை உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும் என அரசு அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

## பூநகரிப் பகுதியில் துருப்புகள் குவிப்பு?

### கடற்படை ரோந்து அதிகரிப்பு

...ரி, ஆலடிப் பகுதியில் ...க துருப்புக்கள் தரை ...ப்பட்டு வருவதாக மீன ...் தெரிவிக்கின்றனர்.

...ல் வழியாக கேரதீவு — ...ப்பிட்டிப் பகுதிகளி ...் படையினர் இறக்கப் ...வருவதாகவும் அவர்கள் ...

...ம் ஊடாக கடலேரிப் ... கடற்படையினரின் ரோந்துப் படகுகளின் எண் ணிக்கை என்றும் இல்லாத வாறு அதிகரித்துக் காணப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, நேற்று முன் தினம் மண்டைதீவுப் பகுதிக் கடலிலும் கடற்படைக் கப் பல்கள் நடமாட்டமிடப்பட்டிருந் ததாக மீனவர்கள் தெரிவித் தனர். (ஓ-51-126)

## பத்திரிகையாளர் மீது நுவரெலியாவில் தாக்குதல்

கொழும்பு, நவ 1

...வரெலியாவில் பத்திரிகை ...ர்கள் சிலர் இனந்தெரி ...தாரால் தாக்கப்பட்ட ... அறிவிக்கப்படுகிறது.

"ராவய", "யுக்திய" ... சிங்கள வாரப் பத்திரி ...கள் நுவரெலியா பகுதியில் ...பனை செய்யப்படுவதைத் ...் தடுத்துள்ளதாகவும் — ...வற்றின் விற்பனையை ...டர்ந்து நடத்துவதற் கான ஒழுங்குகளைச் செய் வதற்காக அங்கு சென்ற இப் பத்திரிகைகளின் ஆசிரிய பீடத் தைச் சேர்ந்தவர்கள், இனந் தெரியாதோரால் தாக்கப் பட்டதாகவும் —

இவற்றின் பின்னணியில் அப்பகுதி பிரபல அரசியல் வாதி ஒருவர் செற்படுவதா கச் சந்தேகிக்கப்படுவதாக வும் —

2 ஆம் பக்கம் பார்க்க]

## ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த சிபாரிசு

கொழும்பு, நவ. 1

...அரசாங்க ஊழியர்களின் ...ஓய்வு பெறும் வயதை 55இருந் ...து 60 ஆக உயர்த்த வேண் ...ம் என்று அரசாங்கத்துக்குச் ...சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

...வெஷ்டன் வணசிங்கா தலை ...மையிலான நிர்வாகவியல் சீர ...மைப்புக் குழுவே அரசாங் ...கத்துக்கு இந்தச் சிபாரிசைச் ...செய்திருக்கிறது.

ஓய்வு பெறும் வயதை 60 ஆக நிர்ணயித்து அதன் பின்னர் வேண்டுமானால் சேவை நீடிப்பு வழங்கும் முறையை அமுலுக்கு கொண்டுவர வேண்டும் என்று அந்தச் சிபாரிசில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களின் உயிர் வாழும் சராசரி வயதெல்லை இப்போது மிகவும் உயர்ந்துள் ளது. அதனால் 55 வயது

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன், சிசில் நேரில் சென்று உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை

கொழும்பு, நவம்பர் 1

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் தனது திட்டத்தை செயற்படுத்துவதற்காக மணலாறில் படைநிலைகளைப் பலப் படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

படைநிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையை மேற் கொள்வது குறித்து நேரில் ஆராய்வதற்காக கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்யரத்ன மற்றும் மூத்த இராணுவ அதி காரிகள் மணலாறுக்கு விஜயம் செய்தனர்.

மணலாறில் நீண்ட இரா ணுவ வேலி ஒன்றை அமைத்து தமிழர் தாயகமான வடக்கை யும் கிழக்கையும் துண்டாட ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டி ருப்பது தெரிந்ததே.

இந்தத் திட்டத்தின்படி மணலாறில் இராணுவ வேலி களை அமைக்கவும், படை நிலைகளைப் பலப்படுத்தவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட் டாரங்கள் முடிவு செய்துள் ளன.

நேற்று முன்தினம் மண லாறுப் பகுதிக்கு விஜயம் செய்த ஹமில்டன் குழுவினர் அங்கு பாதுகாப்பு நிலைமை களை நேரில் அவதானித்த னர்.

அப்பகுதியில் மேற்கொள் ளப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஜென

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியில் படகுகள்

யாழ்ப்பாணம், நவ. 1

பருத்தித்துறைக்கு அப்பால் கடல் பகுதியில் கடற் படையினரின் இரு பாரிய படகுகள் நேற்றுக் காணப் பட்டன. வடமராட்சிக் கடல் பகுதியில் கடற்படையினரின் ரோந்து அதிகரித்து இருக்க வும் காணப்பட்டது. (உ-ஒ)

## காட்டுப் பகுதியில் தாக்குதல் நடத்த ராணுவம் திட்டம்

கொழும்பு, நவ. 1

காட்டுப் பகுதிகளில் விடுத லைப் புலிப் போராளிகளுக்கு எதிராக கடுமையான தாக்கு தல்களை நடத்த ஸ்ரீலங்கா இராணுவம் திட்டமிட்டுள்ள தாக ஏ.எவ்.பி. செய்தி ஒன்று தெரிவித்தது.

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் குறிப்பிட்ட சில பகுதி களில் இருந்து — குறிப்பாக எல்லைப்புறக் கிராமப் பகுதி களில் — மேலதிகமாக இருக் கும் இராணுவத்தினரை அங் கிருந்து விலக்கிக் கொண்டு, அந்தப் பகுதிகளில் பொலீ ஸாரை நிறுத்த முடிவு செய் யப்பட்டுள்ளது.

அப்படி விடுபடும் இராணுவத்தினரே காட்டுப் பகுதிகளுக்குச் சென்று தாக்கு தல் நடத்துவர் என்றும் அந் தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டது. (ஓ-எ)

புலிகளின் போராட்ட வரலாற்றில்

## அக்டோபரில் மிக அதிகமான ஆயுதங்கள் மீட்கப்பட்டன

### ஒரு மாதத்தில் 95 படையினர் பலி!

கொழும்பு, நவ. 1

தமிழீழ விடுதலைப் புலி களின் போராட்ட வரலாற் றில் என்றுமில்லாத அளவு அதிக எண்ணிக்கையான ஆயு தங்கள், நேற்றுடன் முடி வடைந்த அக்டோபர் மாதத் தில் கைப்பற்றப்பட்டன என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த முதலாம் திகதி முதல்... — தமிழீழத்தின் பல பகுதி களிலும் உள்ள இராணுவ அரண்கள் மீது நடத்தப்பட் பத்து தாக்குதல்களின் போது —

ஐம்பது கலிபர் துப்பாக்கி— ஒன்று. ஆர். பி. ஜி. துப்பாக்கி கள் — இரண்டு ஏ. கே. எல். எம். ஜி — ஒன்பது, ஜி. பி. எம். ஜி — ஒன்று, 60 மி. மீ மோட்டார்கள் — இரண்டு மற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் வனத்தைக் காத்து
நாட்டின் வளத்தைக் காப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் நுண்கலையில் ஆர்வம் செலுத்த வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் உரை

பாடசாலை மாணவர்களுக்கு நுண்கலை ஆர்வத்தை வளர்த்தெடுப்பதற்கு ஓவிய சிற்பக் கண்காட்சிகள் ஆண்டுகள் தோறும் நடத்தப்படுவது அவசியம். பாடசாலைகள் இம்முயற்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களின் ஓவிய சிற்பக் காட்சிக் கலைக் கூடத்தை, யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் திறந்து வைத்து உரையாற்றுகையில்: யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சித்திர, ஓவிய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ் றமணி தலைமையில் நடைபெற்ற இக் காட்சியில் கலந்து கொண்டு மேலும் உரையாற்றிய கல்விப் பணிப்பாளர்:

மாணவர்களின் அவதான சக்தியும், கலை ஆர்வமும் வெளிப்படுவதோடு புதிய புதிய ஆக்க முயற்சிகளும் வளர்ந்து முழுமையான மனிதனாவதற்கு இக்கல்வித்துறை வழிவகுக்கும் என்றார். (இ-17)

## ஜம்முவில் 15 பேர் பலி

இந்தியாவின் ஜம்மு. காஷ்மீர் மாநிலத்தில் — ஜம்மு நகருக்கு அருகில் — நேற்று பஸ் ஒன்றுக்குள் குண்டு வெடித்ததில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டார்கள்; 35 பேர் வரை காயமடைந்தனர். [உ-10]

யா / சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்

**ஆண்டு-6 அனுமதிக்கான பிரவேச பரீட்சை-1993**

இக்கல்லூரியில் சேர விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய கட்டடத்தில் இயங்கும் கல்லூரி அலுவலகத்தில் ரூபா 25/- செலுத்திப் பெற்று, 06-11-1992க்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொ. கேதாரநாதன், அதிபர்.

(23101)

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

**1993 - ஆண்டு 6**

அனுமதிப் பரீட்சை: 14 - 11 - 92

விண்ணப்ப முடிவு திகதி: 04 - 11 - 92

திருமதி ய. தியாகராஜா. (அதிபர்)

(28103)

யா / வட்டு இந்துக்கல்லூரி, சித்தங்கேணி

**1993 - ஆண்டு 6 அனுமதித் தேர்வு**

1. மேற்படி பரீட்சை நடைபெறும் திகதி 14 - 11 - 92 சனிக்கிழமை.
2. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 04 - 11 - 1992 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. பரீட்சைக் கட்டணம் 30/-

அதிபர்.

(23106)

**COMPUTER PROGRAMMING**

IN

GW Basic
Turbo Pascal
Dbase III Plus
Lotus 123

அனுபவம் பெற்ற விரிவுரையாளர் நடாத்தும்

**கணனிக் கல்வி வகுப்புகள்**

02–11–92 திங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

தொடர்புகொள்ளும் முகவரி:

J. சத்தியதாஸ்
78, கண்டி வீதி,
சுண்டிக்குளி.

(23105)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 1

லோகேந்திரா வெற்றிக் கேடயத்துக்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் ஐடியல் கிரிக்கெட் கழகம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ காலை 8 30 மணி:- சென்றலைட்ஸ் வி. க. அணி எதிர் செயலகம் வி. க. அணி.

★ முற்பகல் 10 30 மணி;- அரியாலை ஐ. வி. க. அணி எதிர் ஷப்றா அணி.

★ பிற்பகல் 1 30 மணி:- கொய்யாத்தோட்டம் ஐ. க. அணி எதிர் வளர்மதி வி. க. அணி (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ 1

யாழ். நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு;-

★ விநாயகர் அணி எதிர் நேருஜீ அணி.

★ சென். நிக்கிலஸ் எதிர் திருநகர் பாரதி அணி (உ)

★ ★ ★

கோண்டாவில் இந்து இளைஞர் மன்றம் மாவீரர் வாரத்தை முன்னிட்டு நடத்தும் சதுரங்கப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மன்ற மண்டபத்தில் ஆரம்பமாகும்.

**A/L 93**

**துரித மீட்டல்**

ஆரம்பம்:
01–11–1992
மேலும் விவரங்களுக்கு நேரில்

**"A" Level Centre**

1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[C / 3760]

26–10–92 தொடக்கம்

**காணவில்லை**



சு. பகீரதன்
33 வயது
வலது குறைந்தவர்

கடைசியாக வெள்ளை வேட்டியும் கபுப்பு நிற சட்டையும் அணிந்திருந்தார். கண்டவர் அல்லது தகவல் தெரிந்தவர் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

ம. சுந்தரமூர்த்தி
"அமிர் பார்மஸி"
அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[23104]

## 'கோர்பி' அபராதம் செலுத்தினார்

மாஸ்கோ, நவ. 1

முன்னாள் சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் ரஷ்யாவின் அரசியல் சாசன நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக 100ரூபிள் அபராதம் செலுத்தினார்.

இதற்கு முன்னர் திரு கோர்பச்சேவ் தலைமை வகித்ததும், இப்போது தடை செய்யப்பட்டுள்ளதுமான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக நடத்தப்பட்ட நீதிமன்ற விசாரணையில் அவர் சாட்சியம் அளிக்க மறுத்தமைக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

# நிரந்தர இராணுவத்துக்கு 5,000 பேரைத் தரமுடியுமா?

## முஸ்லிம் காங்கிரஸுக்கு சவால்

தனியான முஸ்லிம் படைப் பிரிவொன்றை அமைக்க 10 ஆயிரம் பேர் தயாராக உள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது. இதற்கு முதற்படியாக நிரந்தர ஆயுதப்படையில் சேருவதற்குத் தேவையான பயிற்சியைப் பெற குறைந்தது 5ஆயிரம் பேரையாவது முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வரட்டும் பார்க்கலாம்.

அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் கட்சி இவ்வாறு சவால் விட்டுள்ளது.

இது தொடர்பாக இக்கட்சியின் செயலாளர் நாயகம் எம். எ. கி. ஹசன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## 'கொழும்பு, யாழ்ப்பாணம் அல்ல'

# வெளிநாட்டு செய்தியாளரை சாடுகிறார் மந்திரி மன்சூர்

கொழும்பு, நவ. 01

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நாட்டின் நிலைமை பற்றித் தவறான தகவல்களை அனுப்புவதாக வர்த்தக, வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்:

இந்த நாட்டில் முதலீடு செய்யுமாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அரசு பெரும் பிரயத்தனம் செய்கையில், பத்திரிகையாளர்களின் தவறான தகவல்கள் அம்முயற்சிக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளன என்றும் அவர் கூறினார்.

வெளிநாட்டு நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் உண்மை நிலைமையைத் தெரிவிக்க வேண்டும் எனவும் கொழும்பு, யாழ்ப்பாணம் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சர் போல் பெரேரா, திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க ஆகியோரும் வெளிநாட்டுச் செய்தியாளர்களைக் குறைகூறினராம். [ஒ-10]

## திட்டமிடல் சேவை ஆட்சேர்ப்பு பரீட்சை

யாழ்ப்பாணம் நவ 1

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கொழும்பில் வெளிவந்துள்ளதாக யாழ். செயலக திட்டமிடல் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பரீட்சைக்கு முப்பது வயதுக்குட்பட்ட — பொருளியல், அரசியல் சமூகவியல் புவியியல் வர்த்தக முகாமை, கணிதம், புள்ளிவிவரவியல் முதலான பாடங்களில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் அல்லது —

குறிப்பிட்ட பாடங்களில் பட்டமேற்படிப்புத் தகைமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ஒய்வுபெறும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடுத்தர வயதாகக் கணிக்கப்பட வேண்டும். 55 வயதானவர்களின் ஆற்றல், அனுபவத்தை மேலும் ஐந்து வருடங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்—

அரசாங்க ஊழியர் ஒருவர் 55 வயதாகும் போதே அவருக்குக் குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கின்றன. பிள்ளை உயர்கல்விச் செலவு பெண் பிள்ளைகளுக்கான திருமணச் செலவு, வீடு ஒன்றைச் சொந்தமாகக் கட்டிக்கொள்ளுதல், காணி வாங்குதல் ஆகிய செலவினங்களை அவர் எதிர்நோக்க வேண்டியுள்ளது: —

இவற்றைக் கருத்திற் கொண்டு அரச ஊழியர்களின் தனிப்பட்ட நன்மை கருதியும் நாட்டின் நன்மை கருதியும் ஒய்வு பெறும் வயதெல்லையை உயர்த்த வேண்டும் என்று ஷெல்டன் வணிகசிங்க குழு சிபார்சு செய்துள்ளது.

வணிகசிங்க குழுவின் இந்தச் சிபார்சை தேசியக் குழு ஒன்று பரிசீலனை செய்யும் என்று சமூக நலத்துறை அமைச்சர் திரு. பி தயாரத்ன தெரிவித்துள்ளார். (அ)

## நகர வீதிகளில் 'லாம்பு'கள்!

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இரவு வேளையில் வீதிகளில் "லாம்புகள்" வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்டமாக முத்திரைச் சந்தையில் இருந்து கஸ்தூரியார் தெரு சந்தி வரை வீதி 'லாம்பு'கள் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ-17)

## பத்திரிகையாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகளை ஆதாரம் காட்டி ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது;

பத்திரிகையாளர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கும் சுவரொட்டிகள் நுவரெலியா நகரம் எங்கும் ஒட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் —

ஜனநாயகவளர்ச்சிக்குப் பத்திரிகைச் சுதந்திரம் அவசியம் என்பதை வலியுறுத்தும் பொதுக் கூட்டம் ஒன்று நுவரெலியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்படுகிறது;

சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் இந்தப் பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# யாழ். நகரப் பகுதியிலுள்ள குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 1 யாழ். நகரப் பகுதியிலுள்ள குளங்கள் மற்றும் வடிகால்களைப் புனரமைக்க 18 லட்சம் ரூபா கிடைக்கவிருக்கிறது.

யாழ். நகரப் பகுதியில் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் உள்ள 3 குளங்களையும், வடிகால்களையும் புனரமைக்க நிதி வழங்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்குத் தேவையான 17 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண சபை, புனர்வாழ்வு அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளதாக யாழ். செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

[ஒ-3]

## கைத்தொழில் அதிகார சபை:

## வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பிரதேச செயலகங்கள்

யாழ்ப்பாணம், நவ. 1 தேசிய தொழில் நுட்ப கைத்தொழில் அதிகார சபையின் பிரதேச செயலகங்களை வடக்கு — கிழக்கு மாகாணங்களில் நிறுவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலதரப்பட்ட துறை சார்ந்த தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அதிகார சபையின் பிரதேச அலுவலகங்கள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றன.

இந்த சபையின் பிரதேச செயலகங்களை வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மாதாந்த அலவன்ஸாக 450 ரூபாவும் மற்றும் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

[த-3]

## எதிர்க்கட்சிக் குழு மட்டக்களப்பு விஜயம்

கொழும்பு, நவ. 1 அகதிகளின் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் ஆராய எதிர்க்கட்சிகளின் பிரதி நிதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருந்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

[த]

## 11 "புளொட்" உறுப்பினர்களை மாலைதீவு விடுதலை செய்தது

கொழும்பு, நவ. 1 1989 ஆம் ஆண்டு நவம்பரில் ஆயுதப்புரட்சி மூலம் மாலைதீவு அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்று தோல்வி கண்ட புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் 11 பேரை மாலைதீவு அரசு விடுதலை செய்துள்ளது.

விடுதலைசெய்யப்பட்ட புளொட் உறுப்பினர்கள் 11 பேர் இம் மாதத்தில் கொழும்புக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தோல்வியுற்ற இப்புரட்சியில் சம்பந்தப்பட்ட மேலும் 6 புளொட் உறுப்பினர்கள் இன்னமும் மாலைதீவு நாட்டைச்சேர்ந்த தீவுகளில் ஒன்றில் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த 6 பேரும் அதிதீவிரவாதிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[த-எ]

## பாடசாலை வளவுகளில் அனாமதேய துண்டு பிரசுரம்

மாணவர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துமுகமாக கையால் எழுதப்பட்ட அனாமதேய துண்டுப்பிரசுரங்கள் கொழும்பிலுள்ள பாடசாலை வளவுகளில் வீசப்பட்டன.

இது தொடர்பான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக மாறுவேடம் தரித்த பொலீஸார் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அருகில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய விஷமத்தனமான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவது பற்றி ஏதேனும் தகவல் கிடைத்தால் உடனடியாக அறிவிக்குமபடி பொதுமக்களை பொலீஸார் கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

[த-எ]

## மீண்டும் ராமர் ஆலய பிரச்சினை

புதுடில்லி, நவ. 1 அயோத்தியில் ராமர் ஆலயத்தை கட்டும் பணியை மீண்டும் எதிர்வரும் டிசம்பர் 6 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்போவதாக விஸ்வ இந்துபரிஷத் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இப் பிரச்சினைக்கு சமரச தீர்வு காணுவதற்கு வசதியாக கட்டுமானப் பணியை விஸ்வ இந்து பரிஷத் மூன்று மாத காலத்துக்கு ஒத்திவைத்திருந்தது அந்தக்காலக் கெடு நேற்று முன்தினம் முடிவடைந்தது.

பாப்ரி மஸ்ஜித் பள்ளிவாசலுக்கு அருகில் ராமர் ஆலயத்தைக் கட்டும் பிரச்சினை காரணமாக இந்து, முஸ்லிம் சமூகங்களிடையே பிணக்கு ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

[உ-எ]

## விவசாய பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 1 விவசாய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு விவசாயிகளுக்கு குறுகிய கால— இரண்டு வார கால — பயிற்சி ஒன்றை விவசாயப் பகுதி வழங்கவுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நாளை 2ஆம் திகதி முதல் இப் பயிற்சி நடைபெறவிருப்பதாகவும்—

பயிற்சி பெற விரும்பும் இருபாலாரும் உடனடியாக விண்ணப்பிக்கலாம் என்றும்—

மாவட்ட விவசாயப் பயிற்சி பாடசாலை பண்ணை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

[உ-3]

---

யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

**ஆண்டு - 6 அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1993**

பரீட்சை நடைபெறும் திகதி: **14 — 11 — 1992**

பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 15/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 06 - 11 - 1992 க்கு முன்பு கல்லூரி அலுவலகத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

க. சிவபாதசுந்தரம்,
(அதிபர்)

[23090]

---

வெளிவந்துவிட்டது

கலாநிதி சபா ஜெயராசாவின்

**ஆசிரியர் இயல்**

கிடைக்குமிடம்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

[ஜ/3648]

---

## கிளிநொச்சிக்கு லொறிகளில் உணவுப் பொருள்கள்

கொழும்பு நவ. 1 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் கிளிநொச்சிக்கு கடந்த வியாழன் அன்று 25 லொறிகளில் உணவு மற்றும் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

100 மெற்றிக் தொன் மா, 90 மெற்றிக்தொன் சீனி, 40 மெற்றிக் தொன் உரம், 2 லொறி நிரம்பிய மலத்தியோன் ஆகியவையே அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களாகும்.

[த]

---

**வைத்திய சேவை விஸ்தரிப்பு**

முன்னாள் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலை, யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றிய Dr. S. பாலசந்திரன் தனது சேவையை விஸ்தரித்துள்ளார்.

இடம்: **பாபா கிளினிக்,**
1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

நேரம்: ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்:
காலை 9-00 மணியிலிருந்து பகல் 12-00 மணி வரை
மாலை 2-00 மணியிலிருந்து மாலை 6-00 மணி வரை

கிளை: சங்கானை பிளாக் வீதி.
தினசரி காலை 7 — 8 மணி வரை
இரவு 7 — 8 மணி வரை

[23086]

---

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை
யா/இளவாலைக் கன்னியர் மடம்
மகா வித்தியாலயம், இளவாலை
(தற்பொழுது மானிப்பாயில் இயங்கி வருகின்றன)

**மாணவர் அனுமதி - 1993**

மேற்படி பாடசாலைகளில் புதிய மாணவர்கள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யா/புனித ஹென்றியரசர் கல்லூரியில்
ஆண்டு - 6 இலிருந்து


யா/இளவாலைக் கன்னியர் மடம் -
மகாவித்தியாலயத்தில் -
ஆண்டு - 1 இலிருந்து

ஆண்டு 1, 6க்கான அனுமதிப் பரீட்சைகள் 05-12-1992 இல் நடைபெறும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 15-11-1992 ஆகும்.

[ஜி-3759] — அதிபர்கள்.

---

**45ஆம் நாள் நினைவஞ்சலி**

| வீர ஜனனம்: | | வீர மரணம்: |
|---|---|---|
| 07 |  | 18 |
| — | | — |
| 08 | | 08 |
| — | | — |
| 1976 | | 1992 |

**இராமச்சந்திரன் கோணேஸ்**
(இல்லாலை, றோ. க. பாடசாலை பழைய மாணவன்)

குலவிளக்கே, சோமகனே, கோணேசா - நம்
நிலம் வாழ, தமிழ் இனம் வாழ, மறைந்தனையோ!

திரு. திருமதி பொ. இராமச்சந்திரன்,
(பெற்றோர், பிள்ளைகள்)

"உறவென்று பிறவாமல், எம் உறவாகி நின்றவனே!
அறமென்ற போரினிலே நீ உரமாகி விட்டாயே"

திரு. திருமதி பி. கபிரியேல்பிள்ளை.
(வளர்ப்புத் தாய், தந்தை, பிள்ளைகள்)

[5515]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், கறிமிளகாய், கரட் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல.251,கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம். 07, கைலாசபிள்ளையார்கோவில் பின் வீதி, நல்லூர். [23042]

### விற்பனைக்கு

பூச்சி நீக்கிய, நாலரை மாதம் நிரம்பிய "ஜெர்மன் செப்பேட்" இன அல்சேஷன் நாய்க்குட்டிகளும், நல்ல இன "லவ் பேட்ஸ்" குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: இல. 12A. கந்த புராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [23096]

Royal Hero பாவித்த நல்ல நிலையிலுள்ள ஆண்களுக்குரிய சைக்கிள் விற்பனைக்கு உண்டு அரஸ் புத்தக நிலையம். இல 146 நவீன சந்தை (வைரவ கோயில் அருகில்), யாழ்ப்பாணம். [23094]

இறைச்சிக் கோழிகள் சேவலும், பேடும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம் 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [23066]

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோ. க/கிறிஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப்பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. [இ-3754]

### வெளிவந்துவிட்டது

'மாற்றம்' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறுகதை, பொது அறிவு குறுக்கெழுத்துப் போட்டி, சுவையான புதினங்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டது. ரூ 10/-. ஆண்டுச்சந்தா 35/-. தமிழ்த்தாய் மன்றவெளியீடு. [23074]

**சயன்ஸ் சென்ரர்**
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**93 A/L**
**PAPER CLASS**

ஆரம்பம்:
**01-11-1992**
10 a.m.

BOT:
திரு பாலசுப்பிரமணியம்
ZOO:
திரு. ஈஸ்வரதாசன்
B.Sc. (Cey.)
PHY:
திரு. ரவீந்திரநாதன்
B.Sc (Cey.)
CHE:
திரு. செல்வா
B Sc. (Cey )
PURE: APP:
திரு. குணசிங்கம்
B.Sc (Hons)

நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

[இ-3649]

### விற்பனையாகின்றது

சித்திரம் ஆண்டு 11, சைவ நெறி ஆண்டு 10-11, கந்தர் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறு படை வீடு), கந்தபுராணம், உற்பத்தி காண்டம் இவையாவும் விற்பனையாளருக்கு தகுந்த கழிவுடன் வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, யாழ்ப்பாணம். [23070]

மொத்தமாகவும், சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம். [23071]

### தேவை

உரும்பராயில் இயங்கிவரும் ஆங்கில மருந்தகம் (Pharmacy) ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளரும், வேலை பழக்கூடிய பெண்களும் உடன் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். English Pharmacy, Urumpirai (5529)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, 28 வயது. 8 இல் செவ்வாய் Norway இல் M. Sc. Engineering படித்து விட்டு வேலை செய்பவருக்கு, படித்த, அழகான, நற்குணமுடைய, செவ்வாய்க் குற்றமுள்ள, Norwayக்கு போக விரும்பும் மணப்பெண் தேவை. முழு விபரங்களோடு விண்ணப்பிக்கவும். இல. 458, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [23098]

### மணமகன் தேவை

30 வயது, பூசம் 2ஆம் பாதம், A/L படித்து கொழும்பில் வேலை பார்க்கும் மணமகளுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு என்ஜினியர், டாக்டர், எக்கவுண்டன், மணமகன் தேவை. செ. விஜயரத்தினம், லக்ஷ்மி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [22977]

### மணமகள் தேவை

யாழ். இந்து, வயது 30, ஆசிரியருக்கு படித்த, அழகிய சைவவேளாள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முழு விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு: இல. 04. மே/பா உதயன் சேவை நிலையம், சுன்னாகம். [5411]

### கல்வி

G.C.E.(O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு விசேட சித்திக்குக் கற்பிப்பதில் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஒரு மாதத்தில் தொடர் (40) மணித்தியாலத்திற்குள் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, சாவகச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி [23013]

### ENGLISH

Spoken English with English Grammar and English Literature Starting 02-11-92 Monday Time 6-00 a m. V.N. Kandasamy, AIB (Part 1) (London), Inter (London), 87, Thirunelveli Road, (Near the Bridge), Kokuvil. [23097]

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. [இ-3755]

### ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப. 3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [இ-3752]

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01-11-1992 முதல் 13 - 11 - 1992 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond. Book-Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [இ-3753]

### O/L கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் கணிதம் உதவி நூல் வரிசைகள், மடக்கைகள், விருத்திகள், புள்ளிவிபரவியல், திரிகோண கணிதம், மாதிரி வினாத்தாள்களும், செய்கைகளும் ஒவ்வொன்றும் ரூபா 20-00. மாணவர்கள் தாமாகவே மீட்டலை மேற்கொள்ள சிறந்த நூல்கள். [4983]

### தவறிவிட்டது

துரையப்பா அருமைத்துரை ஆகிய எனது அடையாள அட்டையும், பால் விண்ணப்பப் படிவமும், பிறப்புச் சான்றிதழ்களும், வேறு சான்றிதழ்களும், வடபகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிச் சீட்டும் 30-10-92 இல் திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் துரையப்பா அரியமணி, உரும்பராய் தெற்கு, உரும்பராய் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [23092]

27-10-92 இல் ஆலங்கேணிக்கும், தாண்டிக்குளத்திற்கும் இடையில் கண்ணாடிக் கூட்டுடன் கண்ணாடி, இந்தியா டாக்டரின் ஆலோசனை அன்டுடன் கைப்போர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நா. தனபாலகிருஷ்ணன் அஜந்தா, முருகேசு வளவு, முத்துமாரி அம்மன் கோவிலடி, திருநெல்வேலி தெற்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [23099]

### முறைசாராக் கல்வி பயிற்சி நெறி

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சைக்கிள் திருத்துதல், புத்தகம் கட்டுதல், விவசாயத்தில் சுயவேலை, உணவு - போஷாக்கு, தட்டச்சு திருத்துதல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் ஆகியவற்றுக்கான குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளைப் பயில விரும்பும் பாடசாலை விட்டு விலகியோர், அதிபரிடம் பயிற்சி நெறிகளைக் குறித்து விண்ணப்பங்களைக் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர். [ஓ]

## வாழ்வோர் நாட்டில் 15 ஆம் ஆண்டு நிறைவு



### அமரர் எம். வி. ஆசீர்வாதம் J.P.

(ஓய்வு பெற்ற ஆசிரியரும், ஆசீர்வாதம் அச்சக ஸ்தாபகரும்)

மலர்வு: **06-01-1918** மறைவு: **02-11-1977**

"வாழ்வில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்".

அன்பினால், பண்பினால், அயராத சேவையினால், இன் சொல்லால் அனைவரையும் ஆட்கொண்ட குடும்பத்தின் அன்புத் தலைவரே! உம்மைப் பிரிந்து பல ஆண்டுகள் சென்றிடினும் உயிருள்ளவரை உங்கள் நினைவை உள்ளமதில் வைத்து, இறைவன் பாதம் சேர்ந்திடவே இறைஞ்சுகின்றோம்.

நாளை மலரும் ஆன்மாக்கள் சாந்தியடையும் நன்னாளில் மறைந்த இவரை நினைவு கூர்ந்து மன்றாடும்படி அன்பர்களையும், உறவினரையும் பணிவன்புடன் வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

49, கண்டிறோட்,
யாழ்ப்பாணம். (23063)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
**04 - 08 - 1917**
உதிர்வு:
**13 - 11 - 1991**

திதி:
**01 - 11 - 1992**



### அமரர் பொன்னம்பலம் சின்னம்மா

பாசமிகு அம்மா எங்களைப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றுவிட்டது - அம்மா!
கண்ணீரால் வாடுகின்றோம்
உங்களைப் போன்ற தாயை
இப் பூமிதனில் என்று காண்போம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

533/1, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். [5530]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மர நடுகையை மறவாதீர்!

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகம் அறிவித்த மரநடுகை வாரம் இன்றுடன் முடிவடைகிறது. இந்த ஒரு வார காலத்திலும் குடாநாட்டு மக்கள் தத்தம் பகுதிகளில் மரநடுகையில் தீவிரமாக ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. தங்கள் பிரதேசத்தை வளம்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மக்களிடம் உதித்திருப்பதற்கு அது சான்றாகும்.

இந்தப் பிரதேசம் என்னுடையது; இதுவே எனது தாயக பூமி. இது வளமானதாக இருந்தால் மட்டுமே எனது வாழ்வும் வளமடையும். பூமி தரும் செல்வங்களை — வளங்களை — நான் மட்டும் பயன்படுத்தித் தீர்த்துவிடக் கூடாது. மற்றவர்களும் பயன்படுத்த உதவ வேண்டும். எனது சமகால மக்கள் மட்டுமல்ல இன்னும் பல சந்ததிகளினதும் வாழ்க்கையும் இந்தப் பூமியை ஆதாரமாகக் கொண்டே அமையப் போகிறது. எனவே எங்கள் சந்ததிக்காகவும் நாம் எமது பிரதேசத்தை வளம்படுத்த வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு —

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் எமது தாயகத்தை — பிரதேசத்தை வளம்படுத்தி எமக்கும் எமது சந்ததியினருக்கும் சிறப்பான வாழ்வை உருவாக்க வேண்டும். அந்தக் கடமை எனது பொறுப்பே. நானாக அதனை உணர்ந்து செய்வதே சிறப்பு — என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணிச் செயற்பட வேண்டும்.

எமது பிரதேசத்தில் மழை படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதனை எல்லோரும் நேரில் அறிகிறோம் — உணர்கிறோம். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் ஆவணியில் ஆறு மாத நெல் விதைத்து நல்ல விளைவு கண்டோம்; இப்போது — ஐப்பசியில் — முளைத்த ஆறு அங்குலப் பயிர் நுனியால் கருகி அழிவதைக் காண்கிறோம். மழைவீழ்ச்சி குன்றி வருவதால் உணவு உற்பத்தி மட்டுமன்றி ஏனைய வளங்களும் வரண்டு போய்விடும்.

"விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள் நின்று உடற்றும் பசி" —என்று வள்ளுவர் எச்சரித்திருக்கிறார்.

போதிய மழை பெய்யக் காடுகள், மரங்கள் தேவை. தமிழகத்தில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் பாரிய திட்டமாகச் செயற்படுத்தப்படுகிறது. ஆனால் இங்கே இப்போதைய நெருக்கடியில் பல்லாயிரக் கணக்கான மரங்கள் விறகுக்காகத் தறிக்கப்படுகின்றன; பற்றைக் காடுகள் அழிக்கப்படுகின்றன.

அவற்றை ஈடு செய்ய வீடுகள், வீதிகள், வெளிகள் எங்கும் மரங்கள் நடவேண்டும். ஒரு வாரம் அல்ல, ஒரு மாதம் அல்ல வருடம் முழுவதும் நடவேண்டும். பிறந்த நாள் விழாக்கள், உறவினர் உயிரிழந்த நினைவு நாட்கள், திருமண நாட்கள் என்று ஒவ்வொன்றையும் ஞாபகப்படுத்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரம் நடலாம். நடுவதோடு நில்லாது அது வலிமை பெற்று வளரும் வரை நீரூற்றிப் பாதுகாக்க வேண்டும். எங்கள் தாயகத்தின் கற்பக தருவான பனையை வளர்க்க மறந்துவிடக்கூடாது. அது இலகுவில் வளரக் கூடியது; அதிக பராமரிப்பும் தேவையில்லை.

ஒரு மரத்தை நட்டு வளர்த்துவிட்டே இன்னொரு மரத்தை தறிக்கத் துணிய வேண்டும். மரம் நடும் இயக்கம் வாழ் நாள் முழுவதும் இடைவிடாது, கால இடைவெளி இல்லாமல் தொடரப்பட வேண்டியது.

# 26 இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையால் கைது

சென்னை, நவ 1

கன்னியாகுமரி அருகே 5 இலங்கை மீன்பிடிப் படகுகளுடன் 26 இலங்கை மீனவர்களை தூத்துக்குடியில் இருந்து இயங்கும் இந்தியக் கரையோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

இந்த மீனவர்கள் படையினர் விடுத்த எச்சரிக்கை சமிக்ஞைகளை புறக்கணித்த போது படகுகளை நோக்கி கரையோர காவல் படையினர் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீனவர்களிடம் தக்க ஆவணங்கள் ஏதும் இல்லாததால் அவர்கள் கைது செய்யப்பட்டு, கன்யாகுமரி காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 4 ஆயிரம் லீற்றர் டீசலும், சுமார் 4 கிலோ மீன்களும் கைப்பற்றப்பட்டன. (த)

## விடுவிக்க கோரிக்கை

கொழும்பு, நவ. 1

இந்தியக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடித்ததாகத் தெரிவித்து இந்தியக் கடற்படையினர் கைது செய்த 25 இலங்கை மீனவர்களையும் விடுவிக்குமாறு இலங்கை வெளியுறவு அமைச்சு இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-10)

## 88 ஆயிரம் ஈழ அகதிகளும் ஜனவரி முதல் நாடு திரும்புவர்

கொழும்பு, நவ 1

தமிழகத்தில் எஞ்சியுள்ள சுமார் 88 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தாயகத்துக்கு திரும்புவார்கள்.

புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் சமூகநலத்துறை அமைச்சுச் செயலாளர் கிறிஸ்டி லீலா இத்தகவலை வெளியிட்டார்.

அண்மையில் கொழும்பு வந்த இந்தியத் தூதுக்குழுவுடன் இலங்கை அரசு அதிகாரிகள் இரண்டு தினங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

அதன் பின்னரே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அவர் சொன்னார். இதுவரை சுமார் 30 ஆயிரம் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் இருந்து தாயகம் திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## விலகி ஓடுவோர் எண்ணிக்கை குறைகிறதாம்

கொழும்பு, நவ. 1

இராணுவத்தில் இருந்து விலகி ஓடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் சரத் முனசிங்கா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-எ)

## விமானக் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 1

இன்று முதல் கொழும்பில் இருந்து உலகின் சகல நாடுகளுக்குமான விமானக் கட்டணங்கள் 4.2 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு சங்கானையில் 50 குடிசைகள்

சில்லாலை, மாதகல் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை முருகமூர்த்தி கோவில், அ. மி. தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய முகாம்களில் தங்கியிருந்த 50 குடும்பங்கள் சங்கானை தேவாலய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட 50 குடிசைகளில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து இக் குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. 'போரூட்' நிறுவனம் மலசலகூடங்களை அமைத்து வழங்கி வருகின்றது.

இதேவேளை —

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ரி.ஆர்.ஓ) இப்பகுதியில் இருபத்தைந்து குடிசைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

சைவப்பிரகாச வித்தியாசாலையில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு பாடசாலை சுற்றாடலிலேயே முகாம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-12)

## வட-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் ஓய்வூதியம் பெறுவோர் கோரிக்கை

கொழும்பு நவ. 1

வடக்கு கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் வசித்து வரும் ஓய்வூதியக்காரர்களுக்கு கொழும்பில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைச் செய்து வரும் நடைமுறையை நிறுத்துவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் மேற்கொண்ட தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அவரைப் பணிக்க வேண்டும் எனக் கோரி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரச ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தொடர்ந்து ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## "கறுப்பு வெள்ளி" மருதானை சம்பவங்கள்; கட்டார் ரி.வியில் ஒளிபரப்பு

### அமைச்சர் மன்சூர் தகவல்

கொழும்பு, நவ. 1

'கறுப்பு வெள்ளிக்கிழமை' யன்று மருதானையில் இடம்பெற்ற சம்பவங்களை நான் கட்டார் தொலைக் காட்சியில் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன்.

வர்த்தக, வணிகத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனது 10 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் பத்திரிகையாளரிடம் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மத்திய கிழக்கில் வர்த்தகர்களுக்கான கூட்டம் ஒன்றில் நான் கலந்து கொண்டேன். அப்போது ஒரு செய்தியாளர் —உங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும்படி கூறுகின்றீர்கள். ஆனால் உங்களின் கொழும்பில் இப்பொழுது என்ன நடக்கின்றது என்று என்னிடம் கேட்டார்.

இவ்வாறு அமைச்சர் சொன்னார். (த)

## ஆயுதங்கள் வைத்திருந்ததாக கைதான சுவிஸ் பிரஜை குற்றத்தை ஒப்புக் கொண்டாராம்!

கொழும்பு, நவ. 1

கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் சட்டவிரோதமாக ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சுவிஸ் பிரஜையான அலெக்ஸ் பெளர் கிறிஸ்டியன் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இவ்வாறு தெரிவிக்கிறது.

நீர்கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எஸ். டி. மடவல முன்னிலையில் அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். (த)

## வடக்கு - கிழக்கில் வேலை அற்ற பட்டதாரிகளை உடன் பதியக் கோரிக்கை

கொழும்பு, நவ 1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு இன்றி இருக்கும் பட்டதாரிகள் தமது பெயர் விபரங்களை உடனடியாக கொள்கை திட்டமிடல் அமைச்சின் வேலைவாய்ப்பு வழங்கும் பிரிவில் பதிவு செய்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

இப் பிரிவுப் பணிப்பாளர் திரு. இராமானுஜம் இக் கோரிக்கையை விடுத்திருக்கிறார். (இ-எ)

## விருப்பத்தின் பேரில் சேவையிலிருந்து விலகும் உப்பள ஊழியருக்கு நட்டஈடு

ஆனையிறவு உப்பளத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் விரும்பினால் தமது வேலையில் இருந்து விலகிக் கொள்ளலாம் என்றும்—

அப்படி பதவி விலகுவோருக்குக் கணிசமான நட்டஈடு வழங்கப்படும் என்றும்—

உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் அகவிழி [illegible] புதன் அன்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

வடபகுதியில் நிலவும் சீரற்ற நிலைவரம் காரணமாக ஆனையிறவு உப்பளத்தில் வேலைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் 2 கோடியே 50 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் [illegible] (த)

## கொடுவினைகள் மறையும்!

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

கந்தனின் பதம்பணிந்தால்-
எவ்வினையும் தொலையும்!
சிந்தையில் இதைக் கொள்ளுவாய் - தோழீ!!
.........(கந்த.........)

அனுபல்லவி

தேவர்குலச் சுடரும் வேடர்குலக் கொழுந்தும்
தேடியுள்ளம் மகிழும் தேவாதி தேவன் நல்லைக்
.........(கந்த.........)

சரணம்

சங்கடம் பலசெய்யும் பழவினைகள் தொலையும்!
சங்கிலித் தொடரான கொடுவினைகள் மறையும்!!
செங்கதிர் தனைக்கண்ட வெண்பனியாய் யனைத்துப்
பங்கமெல்லாம் மறையும்-
முருகன் கல்யாணத் திருநாளில்
.........(கந்த.........)

- முருகு.

(கந்தசஷ்டி விழாவைத் தொடர்ந்து முருகன் திருக்கல்யாண விழா இன்று ஆலயங்களில் நடைபெறுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா மகேஸ்வரி
(கள்ளித்தெரு தம்கோவடை, காரைநகர்)

திருமதி நடராசா மகேஸ்வரி 31-10-92 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் கள்ளித்தெரு தம்கோவடை காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற நல்லதம்பி நடராசாவின் அன்பு மனைவியும், திருமதி இராசம்மா மராசசிங்கம், திருமதி சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை, திருமதி சரஸ்வதி தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற முருகேசு வேலாயுதம் ஆகியோரின் சகோதரியும், திருமதி செல்வராணி பரமசிவம், தில்லைநாதன், தேவராசா, புஸ்பராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் துரையப்பா பரமசிவம் காலஞ்சென்ற கௌசலா தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவசுதன், சிவரூபன், சிவகரன், சிவசுதர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடை இல்லத்தில் இன்று (1-11-92) ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. பரமசிவம்
(மருமகன்)
சுதர்சினி ரெக்ஸ்
கே. கே எஸ். றோட்
யாழ்ப்பாணம்

கந்தரோடை,
சுன்னாகம்.

(5417)

### திருமதி
### பொன்னம்மா சின்னத்தம்பி
(காரைநகர் களபூமி பொன்னாவளை)

திருமதி பொன்னம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்) அவர்களின் மனைவியும், மாணிக்கவாசகரின் அன்புத் தாயாரும், நடராசாவின் அன்புச் சகோதரியும், தவமணியின் அன்பு மாமியாரும், கிருஷ்ணாம்பிகை (கனடா), கிருஷ்ணாதேவி, மஞ்சுளா, தயாபரன், கலாபரன், நேசராணி, நிரஞ்சனா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். தகனக்கிரியைகள் (இன்று) 1-11-1992 ஞாயிறு காலை 9-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
அ. நடராசா

1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(5535)

### திருமதி கமலாவதி துரைராஜா
(இளைப்பாறிய ஆசிரியை,
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ம. வி.)

திருமதி கமலாவதி துரைராஜா அவர்கள் நீர்கொழும்பில் 21-10-92 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் துரைராஜா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், பிறேமானந்தன், திருமதி பிறேமினி ஆனந்தராஜா (ஆசிரியை, யா/புனித சாள்ஸ் ம. வி.), கௌரி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. N. C. E ஆனந்தராஜா (இளைப்பாறிய வடபிராந்திய வனபரிபாலன அதிகாரி) அவர்களின் அன்பு மாமியும், கிஷான், ஜொஷான் ஆகியோரின் பேர்த்தியுமானார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் நீர்கொழும்பில் நடைபெற்றன. இதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி பிறேமினி ஆனந்தராஜா.
(மகள்)

இல. 4, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

(23100)

### திருமதி பொன்மலர் தவப்பிரகாசம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திருமதி பொன்மலர் தவப்பிரகாசம் காலமாகி விட்டார். அன்னார் திரு. அ. தவப்பிரகாசம் (முன்னாள் இ. போ. ச. நடத்துனர், கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும், கிருபாகரன் (ஜேர்மனி), ஜெயநந்தினி (ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி) தேவபாலன் (பண்டாரவளை), ஜெயதர்சினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (1-11-92) ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு லவ் லேன் (வசந்தி வீதி), உடுவிலில் நடைபெற்று பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ. தவப்பிரகாசம்
(கணவன்)

'ஜெயா இல்லம்',
லவ் லேன்,
உடுவில்.

(5537)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சாதாரண சட்டத்தின் கீழ் கைதாவோரையும்

# 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்திருக்க சட்டத் திருத்தம்?

கொழும்பு, நவ.1

சாதாரண சட்டத்தின் கீழும் கைது செய்யப்படும் சந்தேக நபரை தடுத்து வைக்கும் கால எல்லையை 24 மணித்தியாலங்களில் இருந்து 90 தினங்களாக அதிகரிப்பதற்கு ஏதுவாக குற்றவியல் நடைமுறைக் கோவையைத் திருத்துவதற்கு பொலீஸ் திணைக்களம் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைக் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

அதிகரித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காக சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் கால எல்லை அதிகரிக்கப்பட வேண்டும் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் சட்டமா அதிபரைச் சந்தித்துக் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது தீவிரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்படுபவர்களே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்கு முன்னர் தொண்ணூறு தினங்கள் தடுத்து வைக்க பொலீஸாருக்கு அதிகாரமளிக்கப்பட்டு உள்ளது. (த-எ)

## நல்லூரில் பக்தர் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 1

நல்லூர் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டியை முன்னிட்டு நேற்று சூரசங்காரம் சிறப்பாக நடைபெற்றது வருடாந்தத் தேர்த்திருவிழாவுக்கு கூடுவதுபோல பெருந்திரளான பக்தர்கள் நேற்றைய சூரன் போரைக்காண வந்திருந்தனர். உள்வீதி, வெளி வீதி எங்கும் பக்தர் கூட்டம் அலைமோதியது.

சூரன்போர் முடிந்து வசந்த மண்டபப் பூசை நிறைவெய்திய பின்னர் சன நெருக்கத்தின் மத்தியில் ஒரு பெண்மணியின் தாலிக்கொடி திருடப்பட்டது. (அ)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 1

கந்தசஷ்டி விழா நடைபெற்ற ஆலயங்களில் இன்று திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று விழா முற்றுப் பெறும். கந்தபுராண படனங்கள், சொற்பொழிவுகளும் இன்று நிறைவு பெறும். (அ-30)

★ ★ ★

கீரிமலை சிவநெறிக் கழகம் இவ்வருடத்திற்கான பண்ணிசைப் போட்டியை இன்று காலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தவுள்ளது. கலாநிதி க. கனகராசாவின் பிறந்தநாளை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-30)

★ ★ ★

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 23ஆம் கிளைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணியை நன்கொடையாக வழங்கிய சி. கனகரத்தினம் தம்பதிகளை பாராட்டும் விழா இன்று கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தில் நடைபெறும். விழா நிகழ்ச்சிகள் பி. ப. 2 30 மணிக்கு ஆரம்பமாகும். (அ)

## பாஷையூர் மீனவர் கைது

குருநகர், நவ. 1

குடாக்கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை பாஷையூரைச் சேர்ந்த இளம் மீனவர் ஒருவரை கடற்படையினர் கைது செய்து கூட்டிச் சென்றுள்ளதாக அவரது சகோதரர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடமும் முறையிடப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

பாஷையூர் முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த மரியதாஸ் சுரேன் (20 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

அவருடன் கடற்றொழிலுக்கு கூடச்சென்ற அவரது சகோதரர் இச்சம்பவத்தின் போது படையினரிடம் பிடிபடாமல் தப்பி வந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-5)

## 1997 இல் எய்ட்ஸ் பிரச்சினை இலங்கையில் தீவிரமாகும்

### சுகாதார அதிகாரி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 1

1997 ஆம் ஆண்டளவில் இலங்கையில் "எய்ட்ஸ்" நோய் தீவிரமாகப் பரவி, சமூகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும். அப்போது நாட்டில் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பர்.

பாலியல் நோய்த் தடுப்பு இயக்கப் பணிப்பாளர் டாக்டர் காமினி ஜயகுரு இவ்வாறு எச்சரித்திருக்கிறார்.

எய்ட்ஸ் நோய் வைரஸால் பீடிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கு அதிகமானோர் இப்போது நாட்டில் இருப்பதாகவும் —

அவர்களில் பெரும்பாலோருக்குத் தாம் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியாது என்றும் அவர் சொன்னார்.

இதுவரை 66 எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்களில் 52 பேர் இலங்கையர் என்றும் —

எஞ்சியவர்கள் வெளிநாட்டார் என்றும் சொல்லப்படுகிறது. (உ-எ)

### அக்டோபரில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் 260 க்கும் மேற்பட்ட நவீன ரகத் துப்பாக்கிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

அத்துடன் 3 லட்சத்து 33 ஆயிரத்து 409 ரவைகளும், 260 கிரனேட்டுக்களும், 579 ஷெல்களும், ஜெனரேற்றர்கள் இரண்டும், வாகனங்கள் இரண்டும் இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி 10 தாக்குதல் சம்பவங்களிலும் 95 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கடந்த முதலாம் திகதி கட்டைக்காடு இராணுவ ஆயுதக் களஞ்சியத்தைக் கைப்பற்றியதன் மூலம் பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர். இத்தாக்குதலின் போது இராணுவத்தினரின் 3 மைல் நீளமான இராணுவ வேலியும், மினிமுகாம் ஒன்றும் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் 5 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான ஆயுதங்களைப் புலிகளிடம் இழந்ததாக ஸ்ரீலங்கா அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

இதேவேளை சுமார் 20 கோடி ரூபா பெறுமதியான 'கண்டுல' என்னும் கப்பல் ஆயுதங்களுடன் கற்பிட்டிக் கடலில் மூழ்கியதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## 27 பேர் கொலை

புதுடில்லி, நவ. 1

பஞ்சாப் மாநிலத்தில் வெளிநாட்டாரின் இரு இல்லங்களில் தங்கியிருந்த 27 பேரை சீக்கிய தீவிரவாதிகள் நேற்று சுட்டுக் கொன்றனர்.

கொல்லப்பட்டவர்கள் பிற மாநிலங்களைச்சேர்ந்த தொழிலாளர்கள் எனக் கூறப்பட்டது. (உ-10)

### மணலாறில்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரல் ஹமில்டன் வனசிங்க அப்பகுதி இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் என்றும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ளோர் அனுப்பிய அன்பளிப்புப் பொருள்களை திரு. வனசிங்க படையினருக்கு விநியோகித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## மரண அறிவித்தல்

### Dr ஆ. துரைச்சாமி
(இளைப்பாறிய R. M. P)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் "இந்திராஸ்தான்", தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் துரைச்சாமி அவர்கள் 24-10-92ல் கண்டியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புக் கணவரும், Dr. கணநாதன் (U K), இந்திராதேவி (கனடா), Dr. கலாதேவி (போதனா வைத்தியசாலை, கண்டி), ஆகியோரின் அன்புத் தந்தையும், காயத்திரிதேவி, ஸ்ரீதரன் (Accountant), Dr. சிவயோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஜயந்தன், மாலயோகஸ்தினி, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-10-92ல் 80, அனிவத்தறோட் கண்டியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. ஸ்ரீசோமாஸ்கந்தர்

தெல்லிப்பழை.

(5416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org